

# தொழுநோய் ஒழிப்பும் சமூக விழிப்புணர்வும்

## சமூகநலப் பணியாளர்களுக்கான கையேடு

Since 1979

**Towards Transformation**


**IVDP**

**Integrated Village Development Project**

9E, 3rd Cross, Shanthi Nagar,
KRISHNAGIRI - 635 001, Tamilnadu, India.

Tele: 04343 - 232129, 236420

Web : www.ivdpkrishnagiri.org
Email: francis.kulandei@gmail.com

# தொழுநோய் பற்றிய விழிப்புணர்வில் ஐ.வி.டி.பி யின் பங்கு



ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் நலன் கருதி ஐ.வி.டி.பியில் பல நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும் புதிய புதிய கொடுமையான நோய்களும் மனிதர்களை தாக்குகின்றன என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். தொழுநோய் நம் மனித வரலாற்றில் மிக மிக பழமையான வியாதியாகும். இது மனிதர்களிடையே மாபெரும் பயத்தை ஏற்படுத்தியது. மக்களின் அறியாமையினாலும் மருத்துவ உலகில் இந்நோய்க்கு சரியான மருந்துகள் கண்டுபிடிக்கப்படாததாலும் இந்நோய்க்கான காரணிகள் கண்டுபிடிக்கப்படாததாலும் 20ம் நூற்றாண்டுவரை தொழுநோயைக் குணப்படுத்த இயலாமல் போயிற்று. இந்நோயினால் பாதிக்கப்பட்ட மக்களின் அறியாமையினாலும், அலட்சியத்தினாலும், இந்நோயின் தன்மையினாலும் உடல் ஊனத்தைக் கண்டு மக்கள் பயப்படுகின்றனர்.

ஆனால் இந்நோய் மக்கள் பயப்படுவதுபோல ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு அவ்வளவு எளிதாக பரவுவது அல்ல. கடந்த 60 ஆண்டுகளாக அரசாங்கம் மற்றும் பல சேவை நிறுவனங்கள் தொழுநோய் ஒழிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. இந்நோய்க்கு 1983ஆம் ஆண்டு கூட்டு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு இன்று தொழுநோய் பெருமளவில் குணப்படுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் தொழுநோய் இன்றும் பலரை பாதித்து வருகின்றது. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் குறைந்த அளவிலே இருந்தாலும் அவர்கள் தாங்கள் தொழுநோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்பது கூடத் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களைக் கண்டுபிடித்து சிகிச்சை அளிப்பது அவசியம். அது தவிர குணமடைந்த பிறகும் ஊனத்துடன் உள்ளவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் வேண்டிய சிகிச்சையும் சுய பாதுகாப்பும் தருவது அவசியம்.

அரசாங்கத்தின் முயற்சியினாலும், பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சேவையினாலும் தொழுநோய் இல்லை என்ற நிலையை ஏற்படுத்த நாம் முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். அதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தவே ஐ.வி.டி.பி மூலம் இந்தக் கையேடு வெளியிடப்படுகிறது. இந்த கையேட்டை ஊக்குனர்கள் அனைவரும் பயனுள்ள விதத்தில் உபயோகித்து மற்றவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

**கிருஷ்ணகிரி 19-12-2012** **குழந்தை பிரான்ஸிஸ் / தலைவர்**


## ஐ.வி.டி.பி

(இன்டகிரேட்ட் வில்லேஜ் டெவலப்மெண்ட் பிராஜக்ட்)

**ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி திட்டம்**

9இ, 3வது குறுக்கு சந்து, சாந்திநகர், கிருஷ்ணகிரி – 635 001

போன்: 04343-236420, 232129.

# தொழு நோயாளிகளை கண்டு பயம் ஏன்?

மனித சமுதாயத்தில் பழமையான நோய்களில் தொழுநோயும் ஒன்று. தொழுநோயால் பாதிக்கப் பட்டவர்கள், தக்க சமயத்தில் சிகிச்சை எடுக்க தவறுவதால் ஏற்படும் ஊனம் மற்றும் உடல் உறுப்புகளின் பாதிப்புகளை கண்டு மக்கள் மனதில் அருவறுப்பும், பயமும் ஏற்பட்டுள்ளது. எனவே பரிபூரணமாக குணமடைந்த, ஊனமுற்ற மனிதர்கள் தெருவில் மற்றும் கோவில் வாசலிலும் ஊனத்தைக்காட்டி பிச்சை எடுக்கும் போது மக்கள் அச்சப்படுகிறார்கள்.





இவர்களின் வாயிலாக தொழுநோய் பரவுவது இல்லை



தொழுநோயாளிகளை தொடுவதால் மற்றும் அவர்கள் உபயோகப்படுத்தும் பொருள்களை பகிர்ந்து கொள்வதினால் நோய் தொற்றிக்கொள்ளும் என்ற எண்ணம் முற்றிலும் தவறானது. தொழுநோயாளியின் கை, கால்கள் மற்றும் மூக்கு உள்வாங்குவதை தொழுநோய் கிருமிகள் எலும்புகளை அரித்து குறைத்துவிடுகின்றன என்று எண்ணுவது உண்மையல்ல.

இதை உணராத மக்கள் தொழுநோயைப் "பெருநோய்" என்று எண்ணி பயப்படுகிறார்கள். பூரண குணமடைந்து ஊனத்துடன் காணப்படுபவர்களை குடும்பத்திலும் சமூகத்திலும் ஒருவராக ஏற்றுக் கொள்வது அவசியம். அவர்களை ஒதுக்கி வெளியேற்றுவது மனித உரிமைகளை மீறும் குற்றமாகும்.




தக்க சமயத்தில் நோயைக்கவனிக்காமல் அலட்சியப்படுத்தியதின் விளைவாகவே ஊனம் ஏற்படுகிறது.


தொழுநோயால் பாதிக்கப்பட்டு முற்றிலும் குணமடைந்த கோடிக்கணக்கானோர் தன்னுடைய குடும்பத்தோடும், சமுதாயத்தோடும் இயல்புவாழ்க்கை வாழ்கிறார்கள்.

# தொழுநோய் பற்றிய உண்மைகள்

தொழுநோய் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி மக்களிடம் பதிந்துள்ள தவறான கருத்துக்களை அகற்றுவோம்




தொழுநோய்க்கிருமி நுண்நோக்கி மூலம் மட்டுமே காணப்படக்கூடியது.




மேல் தோலில் உள்ள திரவத்தை பரிசோதித்தல்

- எளிதாக எல்லோரிடமும் பரவும் தன்மையுடையது அல்ல.
- இறைவனின் சாபத்தாலோ, பாவத்தாலோ, மந்திர தந்திரங்களாலோ ஏற்படுவது அல்ல.
- துவக்கத்தில் ஊனத்தை விளைவிக்காது.
- தொழுநோய்க் கிருமிகள் மனிதனின் உடலில் ஊடுருவி நரம்புகளைப் பாதித்து ஊனமடையச் செய்கிறது.
- பரம்பரையாக வரும் நோயல்ல
- தொழுநோய்க்கு தடுப்பு ஊசி கிடையாது.
- கிருமிகளால் ஏற்படும் நோய். எனவே இயற்கை மருந்துகளாலோ, மந்திரங்களாலோ குணப்படுத்த இயலாது.
- ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து நவீன கூட்டு மருந்து சிகிச்சை உட்கொண்டால் ஊனமடையும் நிலைக்குத் தள்ளப்படாமல் குணம் பெறலாம்.

சிகிச்சைக்கு முன்



சிகிச்சைக்கு பின்



தொழுநோயை எந்த நிலையிலும் முற்றிலுமாகக் குணப்படுத்த இயலும்

# தொழுநோய் யார் யாரைத் தாக்கும்?

நோய் முற்றிய, சிகிச்சை எடுக்காத தொழுநோயாளி இருமும் பொழுதும், தும்மும் பொழுதும் தொழுநோய்க் கிருமிகளை வெளியேற்றுகிறார். தொழுநோய் கிருமிகள் நாம் சுவாசிக்கும் காற்றின் வாயிலாக உடலில் நுழைந்தாலும், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களை மட்டுமே தாக்கக்கூடும்.

எனவே மிகக் குறைந்த அளவில் மட்டுமே மக்கள் தொழுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.

தொழுநோய் வயது வரம்பின்றி ஆண், பெண் மற்றும் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி தாக்கும்.

மனிதனின் உடலில் இயற்கையாகவே நோய் எதிர்ப்புசக்தி இருப்பதால் தொழுநோய்க் கிருமிகளால் நம்மை எளிதில் தாக்க இயலாது.



நோயாளியின் மூச்சுக் காற்றில் இருந்து வெளியாகும் கிருமிகளின் படம்






மருத்துவர் தொழுநோயால் கை புற நரம்பு பாதிக்கப்பட்டிருக்கின்றதா என்று பரிசோதிக்கின்றார்.

# தொழுநோயின் ஆரம்ப அறிகுறிகள்

## உணர்வில்லாத தேமலே தொழுநோயின் முக்கிய அறிகுறி

தோலில் வரும் தொழுநோய் அறிகுறியான தேமலில் அரிப்போ, எரிச்சலோ, உணர்வோ, வலியோ இருக்காது. தொடும்போது உணர்வு குறைவாக இருந்தால் அது பெரும்பாலும் தொழுநோயின் ஆரம்ப அறிகுறியாகும். தேமலில் உணர்வு இல்லாத நிலையே தொழுநோயின் முக்கிய அறிகுறி.





தோலில் வரும் தேமல் தொழுநோயின் ஆரம்ப அறிகுறியாக இருக்கக் கூடும். தேமல், தோலில் வெளிரியோ அல்லது சிவந்தோ காணப்படும். உடலில் எந்த பகுதியிலும் தோன்றலாம்.


# தொழுநோயின் தொடக்க நிலை அறிகுறிகள்

## குறைந்த அளவில் தேமல் காணப்படுதல் (1)

ஒருவர் உடலில் குறைந்த அளவில் தேமல் காணப்பட்டால் அவரது உடலில் குறைந்த அளவில் கிருமிகள் இருக்கின்றன. அவரது உடலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தி தொழுநோயை மேலும் பரவ விடாமல் தடுக்கிறது. எனவே குறைந்த அளவில் மட்டுமே தேமல்கள் காணப்படும். இந்த உணர்வில்லாத, வியர்வை இல்லாத, வறட்சியாக காணப்படும் தேமல் மட்டுமே தொழுநோயின் அறிகுறியாகும்.















பால் போன்ற வெண்மையான படைகள், தோலில் காணப்படும் பிறவி தழும்புகள், அரிப்பு உள்ள படைகள், விட்டமின் குறைவால் ஏற்படும் படைகள் தொழுநோயின் அறிகுறிகள் அல்ல.

# தொழுநோயின் தொடக்க நிலை அறிகுறிகள்

## அதிக எண்ணிக்கையில் தேமல்கள் காணப்படுதல் (2)

ஒருவர் உடலில் அதிக எண்ணிக்கையில் தேமல்கள் காணப்பட்டால் அவரது உடலில் அதிக அளவில் கிருமிகள் இருக்கின்றன. அவரது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருப்பதால் கிருமிகள் பல மடங்காக பெருகுகின்றன. அதிக எண்ணிக்கையிலான தேமல்கள் உடலின் எந்த பாகத்திலும் தோன்றலாம்.











மேற்கண்ட தேமல்கள் தவிர உடம்பில் பல இடங்களில் முக்கியமாக தோலில் ஏற்படும் மாற்றங்கள் தொழுநோயின் அறிகுறிகளாக இருக்கலாம்.


# தொழுநோயின் மற்ற முக்கிய அறிகுறிகள்


## தோலின் நிறத்திலும், அமைப்பிலும் காணப்படும் மாற்றங்கள் (3)

தோலின் தோற்றம் எண்ணைப் பசையுடன் பளபளப்பாக காணப்படும். புருவ முடிகள் உதிர்ந்து காணப்படுதல் மேலும் தடித்த தோலுடன், தடித்த காது மடல்கள், சிறு முடிச்சுகள் தோலின் எந்த பாகத்திலும் தோன்றலாம். பெரும்பாலாக முகத்தில் காணப்படும்.

இந்த அறிகுறிகள் காணப்படும் நபர்கள் உடனடியாக கூட்டு மருந்து சிகிச்சை துவக்காவிட்டால் மட்டுமே மற்றவர்களுக்கு நோய் பரப்பும் வாய்ப்பு அதிகம். கூட்டு மருந்து சிகிச்சை எடுக்க ஆரம்பித்த உடனேயே இவர்களிடமிருந்து மற்றவர்களுக்கு நோய் பரவும் வாய்ப்பு அற்றுப் போகிறது.












மேற்கண்ட தொழுநோய் அறிகுறிகள் காணப்பட்டால் உடல் பரிசோதனையும், முக்கியமாக தோல், நரம்பின் உணர்வு நிலை பரிசோதனையும் செய்து கொள்வது அவசியம். கூட்டு மருந்து சிகிச்சை எந்தநிலையிலும் நோயை முழுமையாக குணமாக்கும்.

# தொழுநோயின் மற்ற முக்கிய அறிகுறிகள்

## நரம்பு பாதிப்பினால் ஏற்படும் தொழுநோய் அறிகுறிகள்

தொழுநோய்க் கிருமிகள் தோலைத் தவிர முகம், கை மற்றும் கால்களிலுள்ள புறபகுதி நரம்புகளை பாதிப்புள்ளாக்கும். கை, கால்களில் உணர்வின்மை ஏற்படும், தசைகளில் பலவீனமும் / வலியின்மையும் உண்டாகும். கை, கால் மூட்டுகள் மடங்கி பின் முடங்கி, நிரந்தரமான ஊனத்தை உண்டாக்கும். கை, கால் செயல்பாடுகள் குறைவு ஏற்படும். உணர்வின்மை, தோலில் வியர்வை இல்லாத வறட்சி, ஈரப்பசை அற்றுப்போவதால் உள்ளங்கைகளிலும், உள்ளங்காலிலும் வெடிப்புகள் தோன்றும். உடனே சுயபாதுகாப்பு செயல்முறைகளை கையாளாவிட்டால் புண்ணாக மாறும்.












நரம்புகள் பாதிக்கப்பட்டு அதனால் உணர்விழந்த கை, கால்களில் கொப்பளங்கள் தோன்றும், இவை பராமரிக்கப்படாததால் புண்களாக மாறும். இந்த புண்கள் தொழுநோயால் உண்டாவது அல்ல. உணர்வின்மையால் ஏற்படும் புண்களின் வழியாக தொழுநோய் பரவுவது இல்லை.

# கைகளுக்கான பாதுகாப்பு செயல்முறைகள்


தொழுநோயாளிகளின் கைகளில் உணர்வின்மை, தோல் வரண்டு போவதால் வெடிப்புகள் தோன்றும். நரம்பு பாதிக்கப்பட்ட கையில் உணர்வின்மையால் வலி தெரியாது. மேலும் அழுத்தத்தை உணர முடியாததாலும், காயப்பட்டாலும் சூடான பொருள்களை தொட்டாலும், ஏதேனும் குத்தினாலும் உணர்வு இருக்காது. சிறு காயம் புண்ணாக மாறிவிடும்.





சூடான, கூர்மையானவற்றை எடுக்க கைத்துண்டை உபயோகிக்கவும்



கையில் எண்ணெய் தடவி விரல்களை விரித்து மூடவும்



விரல்களை மெதுவாக வளைத்து விரித்தல்




கைகளை மெதுவாக தளத்தில் வைத்திருத்தல்

எனவே கைகளில் காயமோ, புண்ணோ ஏற்படாமல் பாதுகாப்பதற்கு சுயபாதுகாப்பு செயல் முறைகளை அன்றாட பழக்கமாக்கிக் கொள்ளவேண்டும்.

# கால்களுக்கான பாதுகாப்பு செயல்முறைகள்

தொழுநோயாளிகளின் கால்களில் உணர்வின்மை, தோல் வறண்டு போவதால் வெடிப்புகள் தோன்றும். நரம்பு பாதிக்கப்பட்ட காலில் உணர்வின்மையால் வலி தெரியாது. காயப்பட்டாலும், கூர்மையான முள், கல் போன்றவை குத்தினாலும் உணர்வு இருக்காது. சிறு காயம் புண்ணாக மாறிவிடும்.



தினமும் காலையிலும் மாலையிலும் எந்த பகுதியிலாவது கொப்பளம் சிவந்திருக்கின்றதா,வலி இருக்கின்றதா என்று தன் கால்களை தானே கவனித்து பார்க்க வேண்டும்




30 நிமிடங்களுக்கு சாதாரண தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். தடித்த ஊறிய திசுக்களை சிறிய கற்களால் தேய்த்து கைகளால் எடுத்துவிட வேண்டும்



கால்களை மடக்கி உட்காரும்போது கீழே துணியைவிரித்து அதன் மீது அமரவும்



வீக்கம் உள்ள காலை தலையணையில் வைத்து இளைப்பாற வேண்டும்



சாதாரண புண்ணையும் முறையாக சுத்தம் செய்து வேப்ப எண்ணை தேய்த்து கட்டுபோட்டு வைக்க வேண்டும். புண்களை கற்களை வைத்து தேய்க்கக் கூடாது



ஆணிகள் உள்ள செருப்பு அணியக்கூடாது மெதுவான எம். சி. ஆர் காலணிகளை உபயோகிக்க வேண்டும்

தொழுநோயால் நரம்புகள் பாதிக்கப்பட்டு முழுமையாக குணமடைந்தவர்கள் தங்களது கால்களில் காயமோ, புண்களோ ஏற்படாமல் பாதுகாப்பதற்கு சுயபாதுகாப்பு செயல் முறைகளை அன்றாட பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

# கண்களுக்கான பாதுகாப்பு செயல் முறைகள்

கண்களில் உணர்வின்மை, கண் இமைகளில் தசை வலுவற்று போவதால் கண் இமைகள் மூட முடியாமல் மற்றும் கண் பார்வை பாதிக்காமல் இருக்க உடனடியாக சுயபாதுகாப்பு செயல்முறைகளை கையாள வேண்டும்



சிவந்த கண்கள்



மூடமுடியாத இமைகள்



கண்கள் வறட்சியை போக்க தினமும் இரண்டு மூன்று முறை தண்ணீரில்கழுவவும்



கருப்புக் கண்ணாடி அணிந்தால் எரிச்சல் ஏற்படாது






தூங்கும் போது சுத்தமான மிதமான துணியால் கண்களை மூடி தூங்கவும்



கண்ணில் சிவந்தோ, வீக்கமோ, கண் புண்களோ ஏற்பட்டால் மருத்துவரின் ஆலோசனைப்படி சொட்டு மருந்து இட வேண்டும்

தொழுநோயால் பாதிக்கப்பட்டு முழுமையாக குணமடைந்தவர்கள் தங்களது கண்ணில் ஏற்படும் மாற்றங்களை கண்டறிந்து கண்பார்வையை பாதுகாக்க வேண்டும்.

# தொழுநோயிற்கான கூட்டு மருந்து சிகிச்சை


கூட்டு மருந்து மாத்திரை அட்டைகள் மற்றும் இலவச ஆலோசனைகளும், சிகிச்சையும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைத்து வேலைநாட்களிலும் கிடைக்கும் அந்த மருந்துகளை எவ்வாறு உட்கொள்ள வேண்டும் என்பதை நோயாளிகள் கேட்டறிவது அவசியம்.

தொழுநோயினால் ஏற்படும் அறிகுறிகளின் அடிப்படையில் கூட்டு மருந்து சிகிச்சை மாத்திரைகள் 6 மாதங்களுக்கு அல்லது 12 மாதங்களுக்கு கொடுக்கப்படும். சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் வேறு வேறு மாத்திரை அட்டைகள் கொடுக்கப்படும்.ஒவ்வொரு அட்டையிலும் ஒரு மாதத்திற்கான மாத்திரைகள் அடங்கியிருக்கும்.

**கூட்டு மருந்து சிகிச்சை முறையாக எடுத்தால் தொழுநோயை பூரணமாக குணமாக்க இயலும்.**
**முறையாக எடுக்கும் கூட்டு மருந்து சிகிச்சை நோய் பரவுவதை தடுக்கும்**

கூட்டு மருந்துகளை தவிர தொழுநோயால் ஏற்படும் நரம்பு சார்ந்த குறைபாடுகளை தசைப்பயிற்சியின் மூலம் சரிசெய்ய முடியும்.

இதற்கான சிகிச்சை மற்றும் பயிற்சி, புண்களை பாதுகாத்தல் போன்ற சேவைகளுக்காக அருகில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நடத்தும் மருத்துவமனைகளை அணுகவும்.



# தொழுநோய் ஒழிப்பில் நம்பங்கு



தொழுநோயாளிகளைக் கண்டு பயப்படுவதோ, மற்றவர்களை பயப்படுத்துவதோ, புறக்கணிப்பதோ முற்றிலும் தவறான செயலாகும். மக்கள் மனதில் பதிந்துள்ள மூடநம்பிக்கைகளை மாற்றுவோம். தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இன்று அதிக அளவில் காணப்படுவதில்லை. காரணம் நவீன கூட்டு மருந்து சிகிச்சை வாயிலாக லட்சக்கணக்கான நோயாளிகள் குணம் அடைந்துள்ளனர். இருப்பினும் தொழுநோய் முழுமையாக அழிக்கப்படவில்லை. இன்றும் ஆங்காங்கே பத்தாயிரத்தில் ஒருவர் என்ற விகிதத்தில் நோயால் பாதிக்கப்படுகிறார்கள். முழுமையாக சிகிச்சை பெற்று குணமடைந்த அனைவரும் ஊனம் இருந்தாலும் தொழுநோயாளிகள் அல்ல. அவர்களை தொழுநோயாளிகள் என்று அழைப்பதும் தவறு. ஏனெனில் நோயின் பின் விளைவே ஊனம். ஊனம் நோயல்ல. தொடக்க நிலை அறிகுறிகள் பற்றிய விழிப்புணர்வுகளை மக்களிடையே பரப்பவேண்டும். அறியாமையால் பரவியிருக்கும் பயத்தை ஒழித்து, குணமடைந்த அனைவரையும் சமுதாயத்திலும் குடும்பத்திலும் ஒருவராக பராமரிக்க வேண்டும்.

**நம் கிராமங்களையும், நகரங்களையும் தொழுநோய் இல்லாதவைகளாக மாற்றவேண்டும். இதற்கு ஒரே வழி தொழுநோய் பற்றிய உண்மைகளையும், ஆரம்ப அறிகுறிகளை பற்றிய விழிப்புணர்வையும் மக்களிடையே பரவச் செய்ய வேண்டும்.**

# தூய மரியன்னை தொழுநோய் மருத்துவமனை

## அரிசிப்பாளையம், சேலம்

ST. MARY'S LEPROSY CENTER
"TOUCH"
SERVE & LOVE

தூயமரியன்னை தொழுநோய் மருத்துவமனை கடந்த 1950 ஆம் ஆண்டு முதல் தொழுநோய் ஒழிப்பு பணியாற்றி வந்தோம். 1955 ஆம் ஆண்டு தேசிய ஒழிப்பு திட்டத்தில் சேர்ந்து இன்று வரை பணியாற்றி வருகின்றோம். தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு புதிய நோயாளிகள் கண்டுபிடிப்பு, சிகிச்சை மற்றும் ஊனத்தடுப்பு மற்றும் மறுவாழ்வு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில் சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, நாமக்கல் ஆகிய ஐந்து மாவட்டங்களில் இப்பணியை செய்து வருகின்றோம்.

தற்சமயம் அரசு மருத்துவ பணியாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு தொழுநோய் பயிற்சி அளித்து அவர்களோடு இணைந்து பணியாற்றுகின்றோம்.

பிற மாவட்ட மருத்துவமனைகளில் இருந்து சிறப்பு மருத்துவ சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் பரிந்துரைக்கப்பட்டு சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தற்சமயம் கிருஷ்ணகிரியில் செயல்படும் ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம் போன்ற சில தொண்டு நிறுவனங்களுடன் பல்வேறு மாவட்டங்களுடன் இணைந்து தொழுநோய் ஒழிப்பு பணியில் ஈடுபடுகின்றோம்.

இப்பணி எமக்கு உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிறது. மக்களோடு இணைந்து செயல்படும் இத்திட்டம் சிறந்து விளங்க ஒன்று சேர்ந்து உழைப்போம்... தொழுநோய் இல்லா உலகை படைப்போம்...

**அருட்சகோதரி. பிரான்சிஸ்கா,**
நிர்வாக அதிகாரி, சேலம்

## தொழு நோய் அறிகுறிகள் காணப்பட்டால் தொடர்பு கொள்ள வேண்டிய இடங்கள்

### தொழுநோய் பரிசோதனை மற்றும் சிகிச்சை

- எல்லா அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்.
- எல்லா அரசு மருத்துவமனைகள்.
- தூய மரியன்னை தொழுநோய் மையம். அரிசிபாளையம், சேலம் 9.

### ஆலோசனை மற்றும் சிறப்பு சிகிச்சைக்கு அனுகவேண்டிய முகவரி

**தூய மரியன்னை தொழுநோய் மையம். அரிசிபாளையம், சேலம் 9.**

போன்: 94433 92966, 97870 34348, 94432 88646.

- சந்தேகப்படும் நபருக்கு தோல் பரிசோதனை செய்யப்படும்
- சிகிச்சை எடுக்கும்போது உடலில் ஏற்படும் எதிர்வினை போராட்டத்திற்கு சிகிச்சை அளிக்கப்படும்.
- ஆரம்ப ஊனத்தடுப்பு பயிற்சி மற்றும் சிகிச்சை அளிக்கப்படும்
- ஆரம்ப சிகிச்சைக்கு முன் மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின் முடநீக்கி பயிற்சி அளிக்கப்படும்.
- ஊனமுற்ற மக்களுக்கு மறுவாழ்வு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

# அலார்ட் இந்தியா

## இந்திய தொழுநோய் கல்வி, மறுவாழ்வு மற்றும் சிகிச்சை சங்கம்

கடந்த 35 வருடங்களாக அலார்ட் இந்தியா ஒரு தன்னார்வ அமைப்பாக, தொழுநோயால் தாக்கப்பட்ட மனிதர்களுக்கு ஒரு மறுவாழ்வு அமைத்து கொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

தொழுநோய் ஒழிப்பதற்கான ஒரு **சிறப்பு தொழுநோய் ஒழிப்புத்திட்டத்தை** மகாராஷ்டிரா மாநிலத்தின் 12 மாவட்டத்திலும், சத்திஸ்கர் மாநிலத்தில் ஒரு மாவட்டத்திலும் செயல்படுத்தி வருகிறது. தொழுநோய் ஒழிப்பிற்கான இரண்டாவது கட்ட பரிந்துரைப்பு மையங்களை மாவட்டங்களில் உள்ள அரசாங்க ஆரோக்கிய சேவைத்தளங்களில் துவக்கி வருகின்றது. இந்த மையங்களில் தரமான, முழுமையான தொழுநோய் சிகிச்சை மற்றும் நோயாளிகளுக்கான பராமரிப்பு பற்றிய பயிற்சிகளை அளித்து வருகிறது.



இந்த தொழுநோயைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை சமூக மேம்பாட்டு அமைப்புகள், மற்ற தொழுநோய் தன்னார்வ அமைப்புகள், அரசு சுகாதார மையங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடனும் செயல்படுத்தி வருகிறது. மேலும், இந்த திட்டத்தின் அடிப்படை நோக்கம் சமுதாய கூட்டமைப்புகளின் பங்கேற்போடு இணைந்து செயல்படுவது.

முக்கியமாக, தொழுநோய் பற்றி சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் தொழுநோயாளிகளை கண்டறிவதிலும், தக்க தருணத்தில் பரிசோதனை செய்து முறையான, முழுமையான சிகிச்சையளிப்பதற்கான வேண்டிய அடிப்படைப் பயிற்சியும் அளித்து வருகிறது.

அலார்ட் இந்தியா, தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது மட்டுமின்றி, அனைத்து பங்கேற்பாளர்களின் கூட்டு முயற்சி வழியாக தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டு வருகிறது.

ஐ.வி.டி.பி யின் இந்தக் கையேடு வெளியீடு தமிழகத்தின் பாமர மக்களிடையே தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு கொண்டுவர உதவும்.

*Content Provided by:*

**ALERT-INDIA**
Association for Leprosy Education, Rehabilitation & Treatment - India
B-9, Mira Mansion, Sion (W), Mumbai - 400 022.
Ph.: 2403 3081-2, 2407 2558 Fax: 2401 7652
E-mail: alert@bom5.vsnl.net.in
http://www.alertindia.org





தொழுநோய் ஒழிப்பில் நம் பங்கு

